


திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் திருப்பூர் அவினாசி சாலை (எஸ்.ஏ.பி. தியேட்டர் அருகில்) ஹோட்டல் "விஸ்வாஸ்" 4வது தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்குமாவட்டப்பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், வடக்குமாவட்டப்பொறுப்பாளர், மாநகராட்சிமேயர் ந.தினேஷ்குமார், ஆகியோர் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினர். இதில் திருப்பூர் வடக்கு மாநகர கழக பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### காங்கேயம் வட்ட மலைக்கரை ஓடையின் குறுக்கே

# ரூ.3.91 கோடியில் தடுப்பணை அமைக்கும் பணி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், மார்ச் 6-

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், வீரணம்பாளையம் ஊராட்சி, காட்டு நாயக்கன் பாளையத்தில் நீர்வளத்துறையின் சார்பில் வட்டமலைக்கரை ஓடையின் குறுக்கே ரூ.3.91 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணியினை 22.02.2025 சனிக்கிழமை அன்று தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா தலைமையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீர்வளத்துறையின் சார்பில் தமிழக மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம், காங்கேயம் ஒன்றியம், வீரணம்பாளையம் ஊராட்சி, வட்டமலைக்கரை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணியினை துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

வட்டமலைக்கரை ஓடை அமராவதி ஆற்றின் கிளை நதிகளில் ஒன்றாகும். இது பல்லடம் பொள்ளாச்சி ரோட்டில் அனுப்பப்பட்டி என்ற இடத்தில் உற்பத்தியாகி பல்லடம் மற்றும் கொடுவாய் பகுதிகளில் பெய்யும் மழைநீர் மற்றும் பரம்பிக்குளம் ஆழியாறு நீர்த்தேக்க கசிவு நீர் ஆகியவற்றுடன் சுமார் 60 கி.மீ கடந்து வட்டமலைக்கரை ஓடை அணை வந்தடைந்து நிரம்பி, பின்பு உபரி நீர் அமராவதி ஆற்றில் சங்கமமாகிறது.

இந்நிகழ்ச்சியில் கண்காணிப்பு பொறியாளர் (நீர்வளத்துறை, அமராவதி வடிநிலக் கோட்டம்) மாரியப்பன், செயற்பொறியாளர் ரா.சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் கு.நாட்ராயன், உதவிப் பொறியாளர்கள் (உப்பாறு அணை) சு.சிவராஜா, (அமராவதி வடிநிலப்பிரிவு) அ.மு.கோகுல சந்தானகிருஷ்ணன், காங்கேயம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.கே.சிவானந்தன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் கே.சண்முகசுந்தரம் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழகம் மின் கழக தொ.மு.ச. செயலாளர் சுந்தர்ராஜ் ஏற்பாட்டின் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர். நிகழ்வில் டி.ஆர்.ரங்கசாமி, விஸ்வநாதன், பொ.சக்திவேல் கணேசமூர்த்தி, பிரபு, ஈஸ்வரமூர்த்தி, லோக நாதன், சரவணன், வீரமுருகன் இளையராஜா, உள்ளிட்ட தொ.மு.ச. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழக மாநகர மாணவரணி அமைப்பாளர் என்.ஸ்ரீதர் ஏற்பாட்டில் பெரியார் நகர் பகுதியில் 72 திருநங்கைகளுக்கு நலத்திட்ட உதவிகளை மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம் வழங்கினார். நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் என்.டி.பத்மநாபன், பகுதி கழக செயலாளர் அக்னி டி.சந்திரசேகர் உள்ளிட்ட மாவட்ட, மாநகர மாணவரணி துணை அமைப்பாளர்கள், பெரியார் நகர் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### தந்தை பெரியார் மீது பெரும் பற்று – பேரறிஞர் அண்ணா மீது பெருமதிப்பு –

# தலைவர் கலைஞர் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தவர், கவிஞர் நந்தலாலா!

## மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 6-

"தந்தை பெரியார் மீது பெரும் பற்றும், பேரறிஞர் அண்ணா மீது பெருமதிப்பும், தலைவர் கலைஞர் மீது மிகுந்த அன்பும் கொண்டிருந்தவர் கவிஞர் நந்தலாலா அவர்கள்!" என்று, அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர் சங்கத்தின் துணைத் தலைவரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினருமான கவிஞர் நந்தலாலா அவர்கள் மறைந்த செய்தி அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.



தமிழ்நாட்டின் புத்தகத் திருவிழாக்கள், முற்போக்கு மேடைகள், தொலைக்காட்சி விவாதங்கள், பட்டிமன்றங்கள் எனக் கவிஞர் நந்தலாலா அவர்களின் குரல் ஒலிக்காத மேடையே இல்லை எனும் அளவுக்கு அனைத்து உணர்ச்சிகளையும், அரிய தகவல்களையும் தமது பேச்சில் வெளிப்படுத்தும் திறம் பெற்றவர் அவர்.

காவிரிக்கரையின் மைந்தனான கவிஞர் நந்தலாலா அவர்கள் தமது ஊரான திருச்சியின் மீது கொண்ட தீராக் காதலுக்கு, "திருச்சிராப்பள்ளி: ஊறும் வரலாறு" நூலே சான்றாகும்.

அவரது ஆற்றல் தமிழ்ச் சமூகத்துக்கு மேலும் பயனளிக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும் அவரை நியமித்திருந்தோம் என்பது குறிப்பி டத்தக்கது.

தந்தை பெரியார் மீது பெரும் பற்றும், பேரறிஞர் அண்ணா மீது பெருமதிப்பும், தலைவர் கலைஞர் மீது மிகுந்த அன்பும் கொண்டிருந்தவர் கவிஞர் நந்தலாலா அவர்கள். தலைவர் கலைஞர் அவர்கள் குறித்து, "தாம் வாழ்ந்த காலம் முழுதும், மானமும் அறிவும்; துணிச்சலும் செயலுமாக வாழ்ந்தவர் கலைஞர். உரிமை மீட்புப் போரில் அவரே நமக்கு என்றும் போர்வாள்" என்று உண்மை இதழில் அவர் எழுதிய சொற்களை மறக்க முடியாது. என் மீதும் மிகுந்த மரியாதையும் பாசமும் கொண்டிருந்தார். எனது பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு பரந்த மனத்தோடும் அன்போடும் வாழ்த்திப் பேசியதையும் இவ்வேளையில் நினைவுகூர்கிறேன்.

மேலும் பல்லாண்டுகள் தமிழ்ச் சமூகத்துக்கு அருந்தொண்டாற்றவிருந்த அவர் மறைந்துவிட்டார் என்பது வேதனையளிக்கிறது. அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர் சங்கத்தின் தோழர்களுக்கும், தமிழன்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



பீளமேடு அண்ணாநகர் தி.மு.க. அலுவலகத்தில், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் வழங்கிய மருத்துவ நிதி உதவி ரூபாய் 25,000/க்கான காசோலைகளை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் 52 வது வார்டு என்.சசிரேகா,48 வது வார்டு எல்.சங்கரநாராயணன் ஆகியோருக்கு வழங்கினார்.இந்நிகழ்வில், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியன், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் இரா.மணிகண்டன், பீளமேடு பகுதி–2 தி.மு.க. செயலாளர் மா.நாகராஜ், மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இரா.தனபால், துணை அமைப்பாளர்கள் லாரா பிரேம் தேவ், கோவை அருண்குமார், துரை பிரவீன் குமார்,மணிகண்டன், இப்னுமசூது, வட்டக் கழகச் செயலாளர்கள் மு.சசிகுமார்,கி.நாராயணன் உடனிருந்தனர்.

### தமிழகத்திற்கு அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# சேலம் மத்திய மாவட்ட சட்டமன்றத் தொகுதிகளில் கண்டனப் பொதுக்கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!



தமிழர்களின் இயக்கம், தமிழினத்தின் மேன்மைக்கான இயக்கம், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்களும் இளம் தலைவர் அவர்களும் நம் மொழி - இனம் காக்க பல்வேறு போராட்டங்களை வென்றெடுத்தவர்கள்.

சமூக நீதி மற்றும் மாநில சுயாட்சி குரல் இன்று இந்திய துணை கண்டம் முழுவதும் கேட்கின்றது. ஏன் எதையும் தமிழ்நாடு மட்டும் எதிர்க்கின்றது என்று கேட்பவர்கள் மத்தியில், இதோ அந்த பட்டியலில் இந்தியாவின் பல மாநிலங்கள் சேர்கின்றது என்று சாதித்து காட்டியவர் நம் கழகத் தலைவர் அவர்கள்.

தமிழ்நாட்டை வளர்ந்த பொருளாதார மாநிலமாக உயர்த்தி காட்டியவர் நம் தலைவர் அவர்கள். அதை பொறுக்க முடியாத ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய கல்வி நிதியை கூட தர மறுக்கின்றது.

எப்போதெல்லாம் இந்தி மொழி ஆதிக்கம் செலுத்தும் எண்ணத்துடன் எல்லைப் புறமாகவோ கொல்லைப் புறமாகவோ நுழைய முயல்கிறதோ அப்போதெல்லாம் நம் இயக்கம் விழிப்புடன் இருந்து தமிழ்நாட்டை பாதுகாத்து வருகின்றது.

தந்தை பெரியார் மூட்டிய தீயை பேரறிஞர் அண்ணா திக்கெட்டும் பரவச் செய்தார். தண்டவாளத்தின் தலை வைத்து தமிழை காத்தவர் நம் உயிர் நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்தி திணிப்பை என்றும் எதிர்க்கவும், நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து இளம் தலைவர் வழிகாட்டுதலின்படி இளைஞர் அணியின் சார்பாக சேலம் மத்திய மாவட்ட கழகத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் கீழ்க்கண்ட தேதிகளில் கண்டனப்பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சேலம் மத்திய மாவட்டக் கழக, மாநகர பகுதி வட்டக் கழக, ஒன்றிய கிளைக் கழக, பேரூர் வார்டு கழக, பொறுப்பாளர்கள் இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: அனைத்து கண்டன பொதுக்கூட்டங்களிலும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் உறுதிமொழியை தவறாமல் எடுத்துக் கொள்ள வேண்டும் என மத்திய மாவட்ட கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

| நாள் | சட்டமன்ற தொகுதி | கூட்டம் நடைபெறும் இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|
| 08.03.2025 | சேலம் வடக்கு | அஸ்தம்பட்டி பகுதி<br>கோரிமேடு | ஐ.பரந்தாமன்<br>செ.யோக ஸ்ரீ |
| 09.03.2025 | சேலம் தெற்கு | கொண்டலாம்பட்டி பகுதி | வழக்கறிஞர் அ.சரவணன்<br>சூரிய பிரகாஷ் |
| 10.03.2025 | சேலம் மேற்கு | ஓமலூர் கிழக்கு ஒன்றியம்<br>கோட்டகவுண்டம்பட்டி | வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ்<br>சேலம் சரண்யா |
| 11.03.2025 | ஓமலூர் | காடையாம்பட்டி கிழக்கு<br>ஒன்றியம்<br>கே.மோரூர் | சௌமியன் வைத்தியநாதன்<br>ச.அஜித்குமார் |

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்**
செயலாளர்
சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.

